DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **O.S.60/2021** |
| **Deposition of witness for** | **:** | **Plaintiff** |
| **Serial No. of Witness** | **:** | **PW.1** |
| **Name** | **:** | ஆவுடையப்பன் |
| **Father's Name** | **:** | நம்பி கோனார் |
| **Village** | **:** | கீழபத்தை |
| **Taluk** | **:** | நான்குநேரி வட்டம் |
| **Age** | **:** | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 09.03.2023.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். கீழபத்தை கிராம மங்களின் பொது பிரதிநிதியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 09.04.1997 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 29.03.2004 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 15.05.2009 தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. பட்டா எண் 1068 வா.சா.ஆ.4. எனது பெயரில் உள்ள தீர்வை ரசீது வா.சா.ஆ.5. 4ம் பிரதிவாதி அலுவலகம், முன்பு டவுண் பஞ்சாயத்தாக இருந்தபோது வழங்கிய தகவல் வா.சா.ஆ.6. தாவா இடத்தை காண்பிக்கும் புகைப்படம் ஒன்று குறுந்தகடுடன் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.7. (வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவஙண்கள் அசல் ஆவணம் தாக்கல் செய்யததால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.